**MCOP NO. 61/2022**
**Date 08.06.2026**
**Pw 1.மேத்தப்பா பாதுஷா**
**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். நான் படித்ததை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து கொல்லம் – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் வைத்து சொக்கம்பட்டி ஊருக்கு தெற்கே நடந்தது என்றால் சரிதான். சொக்கம்பட்டி ஊரை தாண்டியதும் ஒரு வளைவும், அதை அடுத்து திரும்ப தெற்கு நோக்கி திரும்பியவுடன் திரிகூடபுரம் பேரூந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு வளைவுகளுக்கும் பேரூந்து நிறுத்தத்திற்கும் இடையே மொத்தத்தில் 100 மீ தூரம் தான் உள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய இருசக்கர வாகனம் பிளாட்டினாTN 76 X 7020 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தில் என்னுடைய நண்பருடன் தெற்கு நோக்கி ஓட்டி சென்றேன். நான் தான் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். சொக்கம்பட்டி ஊருக்கு அடுத்து உள்ள 2 வளைவுகளுக்கும் நடுவே தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான். மேற்படி 2 வளைவுகளுக்கும் நடுவே அடிக்கடி விபத்து ஏற்படுவதால் வாகனத் தடை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத் தடையை தாண்டி தான் இந்த விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். வாகனத் தடைக்கும், திரிகூட புரம் பேரூந்து நிறுத்தத்திற்கும் இடையே 50 மீ தூரம் கூட கிடையாது என்றால் சரிதான். நான் எனது இருசக்கர வாகனத்தை அதிவேகமாக என்னுடைய நண்பருடன் கவனக்குறைவாக சென்று எதிர் மனுதார் மீது மோதியதால் இந்த விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் பேரூந்து ஓட்டுநர் நான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வருவதை கவனித்து இடது ஓரமாக நிறுத்தப்பட்ட வாகனத்தின் வலது ஓரத்தில் இடித்து விபத்து ஏறபட்டது என்றால் சரியல்ல. எனது வாகனம் எதிர் மனுதாரரின் வாகனத்தில் வலது புறம் முகப்பு விளக்கிற்கு அருகில் மோதியது என்றால் விபத்து எப்படி நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. நான் அதிவேகமாக சாலை தடையை கடந்து செல்ல வேண்டும் என சென்றதால் தான் அந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கும், எதிர் மனுதாரரின் பேரூந்து ஓட்டுநருக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றாலும், இந்த விபத்து பேரூந்து ஓட்டுநரின் கவன்குறைவால்

ஏற்படவி்லைல என்றாலும் , இந்த விபத்திற்கோ, இந்த விபத்தில் ஏற்பட்ட இழப்புகளுக்கோ இந்த எதிர் மனுதாரரின் போக்குவரத்துக்கழகம் எந்தவிதத்திலும் பொருப்பல்ல என்றால் சரியல்ல. என்னுடைய இருசக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது பற்றி தெரியாது. நான் பல்வேறு தலைப்புகளில் கேட்டுள்ள இழப்பீடு தொகைய எதுவும் இந்த எதிர் மனுதாரர் கொடுக்க வேண்டியதில்லை என்றாலும் , நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்,உரிய முத்திரை கட்டணம் செலுத்தாமலும், உரிய சான்று அளிக்கப்படாமலும் இருப்பதால் அவை செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றால் எனது கையில் இரும்பு தகடுகள் பொருத்தப்பட்டுள்ளது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சிறு காயங்கள் என்றாலும்,விபத்தில் ஏற்பட்ட காயங்களால் எனக்கு எந்தவிதமான ஊனமும் இல்லை என்றாலும், எனக்கு வருமானக்குறைவு எதுவும் ஏற்படவில்லை என்றாலும், நான் மனுவில் கூறியுள்ளது போல எந்த வேலையும் செய்து வரவில்லை என்றாலும் சரியல்ல. நான் வேலைப்பார்ப்பதற்கான எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லியுள்ளது போல எந்த வித வேலையும் செய்யாததால் தான், எனது வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே, இந்த மனு எதிர் மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.